Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, JANUARY 10, 2025


வெள்ளிக்கிழமை, 10 ஜனவரி 2025 | ஒளி: 10 கதிர்: 134 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

## ஞானசார தேரருக்கு சிறை



இஸ்லாமிய மதத்தை அவமதித்ததற்காக பொதுபல சேனா (பி.பி.எஸ்.) அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் 9 மாத சிறைத்தண்டனை வியாழக்கிழமை (09) விதித்துள்ளது.

தொடர்ச்சி P2



இலங்கையில்

# “HMPV வைரஸ் தொற்றாளர் இல்லை”

இலங்கையில் எச்.எம்.பி.வி. (HMPV) வைரஸ் தொற்றாளர்கள் எவரும் கண்டறியப்படவில்லை என்றும் பரபரப்புக்காக மக்களை அச்சமூட்டும் வகையில் செய்திகளை வெளியிடுவதை ஊடகங்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (09) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் அரச தரப்பு எம்.பியான நிசாந்த சமரவீர எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறியுள்ளதாவது, பொருளாதார பாதிப்பின் காரணமாக 2022-2024 வரையான காலப்பகுதியில் பெருமளவிலான விசேட வைத்தியர்கள், வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் உட்பட சுகாதார சேவையாளர்கள் சேவையில் இருந்து விலகியுள்ளார்கள், அல்லது நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள். வைத்தியர்கள் மற்றும் சுகாதார சேவையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியதால் சுகாதாரத்துறை கட்டமைப்பு பாதிக்கப்பட்டுள்ளது உண்மைதான்.

தொடர்ச்சி P2



அரசாங்கத்தின் 2025இற்கான செலவீனம்

## 4,218 பில்லியன் 248 மில்லியன் 18 ஆயிரம் ரூபாய் என மதிப்பீடு

ஜனாதிபதி அனுரகுமாத திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான செலவீனமாக 4,218 பில்லியன் 248 மில்லியன் 18 ஆயிரம் ரூபாய் என மதிப்பிட்டு, நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம், பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (09), பிரதமர் கலாநிதி ஹரின் அமரசூரியவினால் தாக்கல் செய்யப்பட்டது.

தொடர்ச்சி P2

உள்ளூராட்சி தேர்தல் சட்டம்:

## சபையில் சமர்ப்பிப்பு

உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) தொடர்பான சட்டமூலத்தை பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் சந்திம அபேரத்ன முதலாம் வாசிப்புக்காக சபைக்கு, வியாழக்கிழமை (09) சமர்ப்பித்துள்ளார்.

பாராளுமன்ற செயலாளர் நாயகம் சட்டத்தரணி குசானி ரோஹணதீர, இந்த சட்டவரைவின் நோக்கத்தை வருமாறு சபைக்கு வாசித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## “பொருட்களின் விலை 19 சதவீதத்தால் குறைவு”

நாட்டில் கடந்த 2024 ஜனவரியில் இருந்ததை விடவும் பொருட்களின் விலைகள் தற்போது 19 சத வீதத்தால் குறைவடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ள பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க, கடந்த இரண்டு மாதங்களே பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் வேகம் குறைவடைந்த காலமாக இருந்தன என்றும் தெரிவித்துள்ளார்.



பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை(09) பல ஒழுங்கு விதிகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறியுள்ளதாவது, பணத்திற்காக எம்.பி. பதவிகளை விற்றவர்கள் இப்போது பொய்களைக் கூறுகின்றனர்.

மோசடி செய்து மக்களை ஏமாற்றச் செய்த, பல்வேறு பெயர்களில் பத்திரிகைகளை ஆரம்பித்து பொய்களைக் கூறுகின்றனர். இவ்வாறான ஊடகங்களால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை வீழ்த்த முடியாது என்று கூறுகின்றோம்.

தொடர்ச்சி P2



## டிஜிட்டல் மயமாக்கல் தொடர்பில் அவதானம்

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, சபாநாயகர் (வைத்திய கலாநிதி) ஜகத் விக்ரமரத்னவை பாராளுமன்ற வளாகத்தில் திங்கட்கிழமை (06) சந்தித்தார். இச்சந்திப்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் கலந்துகொண்டார்.

இந்தச் சந்திப்பின் போது, இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான வலுவான இருதரப்பு உறவை உறுதிப்படுத்தினார். பாராளுமன்றங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பை வளர்ப்பதன் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில், இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளுமாறு அவர் சபாநாயகருக்கு அழைப்பு விடுத்தார்.

இலங்கை பாராளுமன்றத்துக்கு ஒத்துழைக்கும் வகையில் புதிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பாராளுமன்ற பணியாளர்களுக்கும் இந்தியாவினால் பயிற்சி மற்றும் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளும் திட்டம் தொடர்பில் உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டார். அத்துடன், பத்தாவது பாராளுமன்றத்தில் இலங்கை – இந்திய பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தை மீள ஸ்தாபிப்பதற்கு சபாநாயகரின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார். மேலும், ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், பயனுள்ள கொள்கை வகுப்பில் பெண்களின் பங்கை மேம்படுத்தவும் இரு பாராளுமன்றங்களின் பெண் பாராளுமன்ற உறுப்பினர் குழுக்களிடையே நெருக்கமான தொடர்புகளை வளர்ப்பதன் முக்கியத்துவத்தை உயர் ஸ்தானிகர் சுட்டிக்காட்டினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வரலாற்று ரீதியான மற்றும் கலாச்சார ரீதியான நட்புறவை நினைவுபடுத்திய சபாநாயகர் (வைத்திய கலாநிதி) ஜகத் விக்ரமரத்ன, பல்வேறு துறைகளில் இலங்கைக்கு இந்தியா வழங்கும் ஆதரவுகளுக்கு நன்றிகளைத் தெரிவித்தார். மேலும், இரு தரப்பினருக்கும் இடையிலான கலந்துரையாடலில் பொருளாதார மேம்பாடு, டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் பிராந்திய ஒத்துழைப்பு உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

## பட்ஜெட்டில் சம்பள அதிகரிப்பு

இந்த வருடத்திற்கான வரவு-செலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனினும், அதிகரிக்கப்படும் தொகை தொடர்பில் தற்போது தெரிவிக்க முடியாது என பிரதி தொழில் அமைச்சர் மஹிந்த ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை(09) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் ரவி கருணாநாயக்க எம்.பி. எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2

## “பொய்யர்களின் அரசாங்கம்”



ஆட்சிக்கு வந்தவுடன் மின்கட்டணத்தைக் குறைப்பதாக மக்களுக்கு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க வாக்குறுதியளித்தார். தற்போது அப்படிக்கூறவில்லை என்று கூறுகின்றார்கள் காலை முதல் இரவு வரை பொய்யை மாத்திரமே குறிப்பிடுகின்றீர்கள் இதனால் தான் இந்த அரசாங்கத்தைப் பொய்யர்களின் அரசாங்கம் என்கிறோம் என ஐக்கிய மக்கள் சக்தி எம்.பியான தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## “யாரும் ஏமாறவேண்டாம்”



கொரிய பிராந்திய நகரபிதாவுடன் முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார கைச்சாத்திட்டுள்ள ஈ8 விசா தொடர்பான ஒப்பந்தம் முற்றாக சட்டவிரோதமானது என வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித் ஹேரத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை(09) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தின்போது அரச தரப்பு எம்.பி. லக்மாலி ஹேமசந்திரவினால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், இந்த விசாவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுக்க எமது அமைச்சு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கும்.

தொடர்ச்சி P2

## தவில் வித்துவானின் மகன் விபத்தில் பலி

எஸ்.தில்லைநாதன்



யாழ். வல்லைப் பகுதியில் புதன்கிழமை (08) இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பிரபல தவில் வித்துவான் விஜயகுமாரின் மகனான 21 வயதான விஜயகுமார் மணிகண்டன் என்ற இளைஞன் உயிரிழந்துள்ளார்.

இவர், யா/நெல்லியடி மத்திய கல்லூரி பழைய மாணவனும் பிரபல தவில் வித்துவான் விஜயகுமாரின் புதல்வனும் ஆவார்.

யாழ். நகர்ப் பகுதியில் இருந்து பருத்தித்துறை நோக்கி வேகமாக மோட்டார் சைக்கிளில் வந்த குறித்த இளைஞன், வல்லைப் பகுதியில் மாட்டுடன் மோதி விபத்துக்கு உள்ளானதாகக் கூறப்படுகிறது.

தொடர்ச்சி P2

## நாகை மீனவர்கள் 12 பேருக்கும் பிணை

எஸ்.தில்லைநாதன்

தடை செய்யப்பட்ட இழுவைப்படகை பயன்படுத்தி கடந்த வருடம் நவம்பர் 11ஆம் திகதி பருத்தித்துறை கடற்பரப்பில் எல்லை தாண்டி,மீன்பிடியில் ஈடுபட்ட நாகை மாவட்ட மீனவர்கள் 12 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.


கைது செய்யும் நடவடிக்கையின் போது கடற்படை உத்தியோகத்தர்களை தாக்கி கடமைக்கு இடையூறு விளைவித்தது, கடற்படை படகை சேதப்படுத்தியது, எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 12 பேரும் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இதன் போது வழக்கை விசாரித்த நீதவான் கிருசாந்தன் பொன்னுத்துரை கடந்த நவம்பர் 27ஆம் திகதி எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டி, தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் நிபந்தனையுடன் விடுவித்து உத்தரவிட்டிருந்தார்.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



# “HMPV வைரஸ் தொற்றாளர் இல்லை”

நாட்டை விட்டு வெளியேறியுள்ள மற்றும் சேவையில் இருந்து விலகிய வைத்தியர்கள், சுகாதார சேவையாளர்களை மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வைத்தியர்கள் ஓய்வுபெறும் வயதெல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சீனாவில் பரவும் எச்.எம்.பி.வி. வைரஸ் தொற்று தாக்கத்துடன் இலங்கையில் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக ஒரு சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இலங்கை மருத்துவ சபையில் புதன்கிழமை(8) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேராசிரியர் நிலிகா மலவிகே ‘கடந்த காலங்களில் இலங்கையில் இந்த வைரஸ் தொற்று அடையாளம்' காணப்பட்டிருந்ததாகக் குறிப்பிட்டிருந்தார்.

இந்த விடயத்தை ஒரு சில ஊடகங்கள் முழுமையாக திரிபுபடுத்தி தற்போது அந்த நோய் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகப் பொய்யான செய்தியை வெளியிட்டுள்ளன.

பரபரப்புக்காக, தமது பிரபல்யத்துக்காக மக்களை அச்சமூட்டும் வகையில் செய்திகளை வெளியிடுவதை ஊடகங்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இந்த வைரஸ் தொற்று பரவல் தொடர்பில் நாட்டில் 20 பிரதேசங்கள் அடையாளம் காணப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நோய் அறிகுறியுடன் அடையாளம் காணப்பட்ட நபர் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைக்கு அமைய அந்த நபர் எச்.எம்.பி.வி. வைரஸ் தொற்றுக்குள்ளாகவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் தொற்று பரவல் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். நாம் அவதானத்துடன் செயற்படுகிறோம் என்றும் தெரிவித்துள்ளார்.

# ஞானசார தேரருக்கு சிறை

மேலும், சிறைத் தண்டனைக்கு கூடுதலாக, ரூ.1,500 அபராதத்தையும் கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

ஞானசார தேரர் குற்றச்சாட்டுகள் தொடர்பாக நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியதைத் தொடர்ந்து பிறப்பிக்கப்பட்ட முந்தைய கைது வாரண்டைத் தொடர்ந்து இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மத அவமதிப்பு தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள கலகொட அத்தே ஞானசார தேரர், டிசெம்பர் (19) வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது நீதிமன்றில் ஆஜராகாததால் அவரை கைது செய்து மன்றில் முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

அவருக்கு சுகயீனம் ஏற்பட்டுள்ளதால் அவரால் நீதிமன்றில் ஆஜராக முடியாது என ஞானசார தேரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

முன்வைக்கப்பட்ட விடயங்களைப் பரிசீலித்த கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன, வழக்கின் தீர்ப்பை ஜனவரி 9 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இஸ்லாத்தை அவமதித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு ஒன்பது மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட பொதுபல சேனா செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரரின் சிறைத்தண்டனையை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டிற்கு பிணை வழங்க கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன வியாழக்கிழமை (09) மாலை மறுத்துவிட்டார்.

பிணை வழங்க மறுத்த மேலதிக நீதவான், குற்றம் சாட்டப்பட்டவருக்குப் பிணை வழங்க போதுமான காரணங்கள் இல்லை என்று கூறியுள்ளார்.

# சபையில் சமர்ப்பிப்பு

‘குறித்த சில உள்ளூர் அதிகார சபைகளின் தேர்தல்கள் கோரப்பட்டு பிற்போடப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய உள்ளூர் அதிகார சபைகள் தொடர்பில் புதிய நியமனப் பத்திரங்களைக் கோருவதற்காகவும், தேர்தல்களை நடத்துவதற்காகவும் ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன், அதனோடு தொடர்புப்பட்ட அல்லது அதன் இடை நேர் விளைவான கருமங்களுக்காக உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# பட்ஜெட்டில் சம்பள அதிகரிப்பு

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது, சர்வதேச நாணய நிதியத்துடன் இது தொடர்பில் எந்தவொரு சிக்கலும் இதுவரை ஏற்படவில்லை. அந்த வகையில், எந்த பாதிப்பும் ஏற்படாது.

அத்துடன், சம்பள அதிகரிப்பை மேற்கொள்ளக்கூடாது என சர்வதேச நாணய நிதியம் எவ்விடத்திலும் தெரிவிக்கவில்லை.

நாட்டில் ஊழியர்கள் உழைக்கும் போது செலுத்தும் வரியைக் குறைக்குமாறு வேலை நிறுத்தப் போராட்டம் மற்றும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்ட போது, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அதனைச் சர்வதேச நாணய நிதியத்திடம் சென்று கலந்துரையாடுமாறு தெரிவித்தார்.

பொதிக்குள் என்ன இருக்கின்றது என்பதைப் பார்ப்பதற்கு இப்போது அவசரப்பட வேண்டாம்.

25,000 ரூபாய் இல்லாவிட்டாலும், தற்போதைய வாழ்க்கை செலவுக்கு ஏற்ப அந்த சம்பள அதிகரிப்பு வழங்கப்படும்.

25,000 ரூபாய் சம்பள அதிகரிப்பு என்பது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்த விடயம். அதனை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. இரண்டு வருடங்களுக்கு மேல் அவர் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அவர் அதனை செய்யவில்லை என தெரிவித்துள்ளார்.



# 4,218 பில்லியன் 248 மில்லியன் 18 ஆயிரம் ரூபாயென மதிப்பீடு

நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு தொடர்பான நிதியமைச்சரான ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் வரவு-செலவுத் திட்ட உரை பெப்ரவரி 17ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அதன் பின்னர் வரவு- செலவுத் திட்ட உரை மீதான விவாதம் அடுத்த மாதம் 18 முதல் 25ஆம் திகதி வரை தொடர்ச்சியாக 7 நாட்களுக்கு நடத்தப்படவுள்ளது.

இதனையடுத்து, பெப்ரவரி 25ஆம் திகதி வரவு- செலவுத் திட்டத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு நடைபெறும்.

பெப்ரவரி 27 முதல் மார்ச் 21ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் குழு நிலை விவாதம் இடம்பெறும்.

மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு மார்ச் 21ஆம் திகதி சபையில் இடம்பெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# “பொருட்களின் விலை 19 சதவீதத்தால் குறைவு”



பொருட்களின் விலைகள் தொடர்பில் கூறுகின்றனர்.

ஆனால், கடந்த வருடம் ஜனவரியில் இருந்ததை விடவும் பொருட்களின் விலைகள் குறைவடைந்துள்ளன.

40 பொருட்களில் 8 பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. 19 சதவீதத்தால் பொருட்களின் விலைகள் குறைவடைந்துள்ளன. விலைகள் அதிகரிக்கும் வேகம் குறைந்த காலமாகக் கடந்த மாதங்கள் உள்ளன எனவும் கூறியுள்ளார்.

# “யாரும் ஏமாறவேண்டாம்”

அதேநேரம், ஈ9 மற்றும் ஈ7 விசா முறையின் கீழ் கொரிய தொழிலுக்கு இளைஞர், யுவதிகளை அனுப்பும் நடவடிக்கை இடம்பெறுகிறது. எனவே, கொரிய தொழில் பெற்றுத்தருவதாக ஏமாற்றி பணம் அறவிடும் முகவர் நிறுவனங்களிடம் யாரும் ஏமாற வேண்டாம்.

இந்த ஒப்பந்தத்தில் கொரிய பிராந்தியத்தின் நகரபிதா பாகிஸ்தானுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தில் ஒரு சில இடங்களில் இலங்கை என திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

அதிகமான இடங்களில் பாகிஸ்தான் என்றே இருக்கிறது. அதைக்கூடப் பார்க்காமலே கைச்சாத்திட்டிருக்கிறார் என்றும் தெரிவித்துள்ளார்.

ஈ8 விசா தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் சட்டவிரோதமானது. 2024 ஏப்ரல் 26ஆம் திகதி அப்போது தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சராக இருந்த மனுஷ நாணயக்கார இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளார் என்றும் கூறியுள்ளார்.

# நாகை மீனவர்கள் 12 பேருக்கும் பிணை

ஆனால், கடற்படை உத்தியோகத்தர்களை தாக்கியமை தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாரினால் மேற்கொண்ட வழக்கில் விளக்கமறியலில் மீனவர்கள் 12 பேரும் 2025 ஜனவரி 08ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த வழக்கு மீண்டும் பருத்தித்துறை நீதிமன்றில் நீதவான் கிருசாந்தன் பொன்னுத்துரை முன்னிலையில், மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, வழக்கை விசாரித்த நீதவான் இந்திய மீனவ படகோட்டிக்கு



8 மாத கடூழிய சிறையும் ஏனைய 11 மீனவர்களுக்கு ஆறு மாத கடூழிய சிறைத் தண்டனையை பத்து வருடங்களுக்கு ஒத்தி வைத்து நிபந்தனை அடிப்படையில் விடுவித்து உத்தரவிட்டுள்ளார். படகு அரசுடைமையாக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# தவில் வித்துவானின் மகன் விபத்தில் பலி




படுகாயமடைந்த இளைஞர் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

சடலம் உடற்கூற்று சோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது மேலதிக விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# “பொய்யர்களின் அரசாங்கம்”



பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (09) இடம்பெற்ற பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறியதாவது, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க ஆட்சிக்கு வந்து குறுகிய காலத்தில் மின்கட்டணத்தை 35 சதவீதத்தால் குறைப்பதாக வாக்குறுதியளித்தார். மின்கட்டணம் குறைப்பு ஊடாக நிவாரணம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தான் நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தார்கள்.

5,000 ரூபாய் கட்டணத்தை 3,000 ரூபாவாகவும், 9,000 ரூபாவை 6,000 ரூபாவாகவும் குறைப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். ஆனால் தற்போது கட்டணம் குறைக்கப்படவில்லை. 6.1 சதவீதத்தால் மின்கட்டணத்தைக் குறைப்பதாக மின்சார சபை முன்வைத்த முன்மொழிவை இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்கழு இரத்து செய்து மின்கட்டண திருத்த முன்மொழிவை மீளாய்வு செய்யுமாறு மின்சார சபைக்கு அறிவுறுத்தியிருந்தது என்றார்.

## திருவெம்பாவை

அம்பாறை மாவட்ட திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தில் வருடாந்த திருவெம்பாவை நிகழ்ச்சி பணிப்பாளர் கண.இராஜரெத்தினம் (கண்ணன்) தலைமையில் நடைபெற்றது.

அச்சமயம், குருகுலத்தின் உடைய பொருளாளரும், திருக்கோவில் வலயக் கல்வி அலுவலகத்தின் திருக்கோவில் கோட்ட ஓய்வு நிலை கல்வி பணிப்பாளருமான சோமசுந்தரம் ரவீந்திரன் கலந்து சிறப்பித்தார்.

விநாயகபுரம் குருகுலத்தில் சிறப்பாக நடைபெற்ற இந்நிகழ்வில் அறநெறி ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நன்றியுரை குருகுலத்தின் உடைய பொதுச்செயலாளர் பா.சந்திரேஸ்வரன் நிகழ்த்தினார்.

– வி.ரி.சகாதேவராஜா




















### பிடித்து வைத்தல் வரியை அதிகரித்து

# அரசாங்கம் மக்களின் வயிற்றில் அடிக்கிறது

வங்கி சேமிப்பு மற்றும் நிலையான வைப்பு மூலம் வாழ்க்கை நடத்தும் நடுத்தர மக்களின் வயிற்றில் அடிக்கும் அரசியலைத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மேற்கொள்வதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் யாழ் மாவட்ட பிரதான அமைப்பாளர் கீதநாத் காசிலிங்கம் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஐந்து சத வீதமாக இருந்த withholding tax 10 சத வீதமாக உயர்த்தப்பட்டமை குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

'தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் "பிடித்துவைத்தல் வரியை" (withholding tax ) 5% இல் இருந்து 10% ஆக அதிகரித்துள்ளமை ரணிலின் அரசை விட மோசமான மக்களின் வயிற்றில் அடிக்கும் ஒரு செயலாகும்.

முன்னரை விட வரிச் சுமையை ஏற்றி, விடிவுக்காய் மாற்றத்துக்காய் காத்திருந்த மக்களுக்கு வாழ விடாமல் செய்கிறதா இந்த அரசு? ரணில் விக்ரமசிங்க ஆட்சியில் பிடித்து வைத்தல் வரி 5% இருந்த போது, ஆர்ப்பாட்டம் நடத்திய தேசிய மக்கள் சக்தி, இன்று ஆட்சிக்கு வந்து 10% மாக உயர்த்தியது ஒரு பச்சை நம்பிக்கை துரோகம்.

ரூ.150, 000 வரை வரி இல்லை



எனும் நிலையில், சேமிப்பில் இருந்தும், நிலையான வைப்பில் இருந்தும் வாழ்க்கையை நடத்தும் பல நடுத்தர வர்க்க மக்களின் சோற்றில் மண் அள்ளிப்போடுவது முறையா?' என சாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நீதியரசர்கள் இருவர் சத்தியப்பிரமாணம்

புதிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் இருவர் ஜனாதிபதி செயலகத்தில், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க முன்னிலையில் வியாழக்கிழமை (09) காலை சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளனர்.

அதன்படி, சட்டத்தரணி கே.எம்.எஸ்.திசாநாயக்க மற்றும் சட்டத்தரணி ஆர்.பி.ஹெட்டியாராச்சி ஆகியோர் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவும் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தவறவிட்ட பயண பொதி சில மணி நேரத்துக்குள் மீட்பு

## எடுத்தவரை சி.சி.ரி.வி. காட்சிகள் மூலம் தேடுகின்றனர்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

ரயிலில் தொலைந்து போன வெளிநாட்டவரின் பயண பொதியை பொலிஸாரும் ரயில்வே அதிகாரிகளும் இணைந்து சில மணி நேரங்களுக்குள் கண்டுபிடித்துள்ளனர்.

கொழும்பு கோட்டையில் இருந்து பதுளைக்கு வியாழக்கிழமை (08) சென்ற பயணிகள் ரயிலில் பயணித்த இந்திய நாட்டவரின் காணாமல்போன பயணப் பொதியே இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் மும்பையைச் சேர்ந்த 39 வயதான சுற்றுலாப் பயணி, அதே ரயிலில் எல்லவுக்கு இரண்டாம் வகுப்புப் பெட்டியில் பயணித்துக் கொண்டிருந்தபோது, வட்டவளை மற்றும் ஹட்டன் ரயில் நிலையங்களுக்கு இடையில் தனது பயணப் பொதியை தவறவிட்டுவிடதாக ஹட்டன் ரயில் நிலைய அதிபரிடம் முறைப்பாடு செய்துவிட்டு, அதே ரயிலில் எல்ல ரயில் நிலையத்திற்கு அந்த பயணி பயணித்துள்ளார்.


ஹட்டன் ரயில் நிலைய நிலைய அதிகாரி, வட்டவளை ரயில் நிலையத்தில் இந்த விஷயம் குறித்து விசாரித்த போது, காணாமல் போன பணப் பையைப் போன்ற ஒரு பையை எடுத்துக் கொண்டு ரயிலில் வந்த ஒருவர் முச்சக்கர வண்டியில் வட்டவளை பகுதிக்குப் பயணித்ததாக அவருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து, ஹட்டன் ரயில் நிலைய அதிகாரிகளால், வட்டவளை பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டுள்ளது.

விரைந்து செயற்பட்ட வட்டவளை பொலிஸ் நிலைய அதிகாரிகள், ஹட்டன்-கொழும்பு பிரதான வீதியில் உள்ள வட்டவளை ரொசெல்ல பகுதிக்குச் சென்று, அந்த வீதியில் வாடகைக்கு எடுக்கப்பட்ட முச்சக்கர வண்டிகளின் ஓட்டுநர்களிடம் விசாரித்துள்ளனர்.

இந்நிலையில், கினிகத்தேனையில் இருந்து ஹட்டன் நோக்கிச் செல்லும் இலங்கை போக்குவரத்து சபை பேருந்தில் இதுபோன்ற பையுடன் ஒருவர் ஏறியதாகத்





FTP හැටන් රංජිත් රාජපක්ෂ (0773407979) 09.01.2025

**දුම්රියේදී අස්ථානගත වූ විදේශිකයාගේ ගමන් බෑගය පැය කිහිපයක් තුල සොයාදීමට පොලිසිය සහ දුම්රිය නිලධාරීන් සමත්වෙයි.**

කොළඹ කොටුව සිට බදුල්ල දක්වා (08) දින ධාවනය කල 1007 මගී ප්‍රවාහන දුම්රියේ ගමන් කල ඉන්දියානු ජාතිකයාගේ අස්ථානගත වූ ගමන් බෑගය පැය කිහිපයක් තුල සොයා ගැනීමට හැටන් දුම්රිය ස්ථානයේ ස්ථානාධිපති ජානක ප්‍රනාන්දු මහතා සහ වටවල පොලිසියේ නිලධාරීන් සමත්වී ඇත.

ඉන්දියාවේ මුම්බායි ප්‍රාන්තයේ පදිංචි අවු 39 හැවිරිදි සංචාරකයා එම දුම්රියෙන් ඇල්ල දක්වා දෙවන පන්තියේ මැදිරියේ ගමන් කරමින් සිටියදී වටවල සහ හැටන් දුම්රිය ස්ථාන දෙක අතරදී තම ගමන් බෑගය අස්ථානගත වී ඇති බවට හැටන් දුම්රිය ස්ථානාධිපතිවරයාට පැමිණිලි කර සංචාරකයා එම දුම්රියෙන්ම ඇල්ල දුම්රිය ස්ථානය දක්වා ගමන් කර ඇත.

වහාම ක්‍රියාත්මක වූ හැටන් දුම්රිය ස්ථානයේ ස්ථානාධිපතිවරයා වටවල දුම්රිය ස්ථානයෙන් ඒ සම්බන්ධයෙන් කරුණු විමසා සිටියදී අස්ථානගත වූ ගමන් බෑගයට සමාන බෑගයක් රැගෙන දුම්රියෙන් පැමිණි පුද්ගලයෙකු වටවල ප්‍රදේශයට ත්‍රිරෝද රථයකින් ගමන් කල බවට පැවසීමත් සමග හැටන් දුම්රිය ස්ථානාධිපතිවරයා විසින් ඒ සම්බන්ධයෙන් වටවල පොලිසිය දැනුවත් කර ඇත.

සිද්ධිය සම්බන්ධයෙන් ක්‍රියාත්මක වූ වටවල පොලිසියේ වැඩ බලන ස්ථානාධිපති උපොප ආර්.එම්.එස්.ජයරත්න මහතා ඇතුළු පොලිස් නිලධාරීන් හැටන් කොළඹ ප්‍රධාන මාර්ගයේ වටවල රොසැල්ල ප්‍රදේශයට ගොස් එම මාර්ගයේ කුලී ත්‍රිරෝද රථ රියදුරන්ගෙන් කරුණු විමසීමේදී එවැනි බෑගයක් සහිත පුද්ගලයෙකු ගිනිගත්හේන සිට හැටන් දක්වා ධාවනය වූ ලංගම බස් රථයක නැග ගමන් කල බවට දැනුම් දීමත් සමග පොලිස් නිලධාරීන් එම බස් රථය සොයාගෙන ගොස් ඇත.

හැටන් දුම්රිය ස්ථානයේ දුම්රිය ස්ථානාධිපතිවරයා හැටන් ලංගම ඩිපෝවේ උසස් නිලධාරීන් මේ සම්බන්ධයෙන් දැනුවත් කර සොයාබැලීමකදී අදාල ලංගම බස් රථය ඩිපෝව තුල නතර කර ඇති බවත්, එම බස් රථය පරික්ෂා කිරීමේදී ඉන්දියානු ජාතික සංචාරකයාට අයත් ගමන් බෑගය බස් රථයේ ගමන් මළු රඳවනය තුල ඇති බවට ඩිපෝවේ නිලධාරීන් දැනුම් දීමෙන් පසු දුම්රිය ස්ථානාධිපතිවරයා විසින් ඒ සම්බන්ධයෙන් වටවල පොලිස් ස්ථානයේ නිලධාරීන් දැනුවත් කර ඇත.

தகவல் கிடைத்துள்ளது.

இந்த விடயம் குறித்து ஹட்டன் ரயில் நிலைய நிலைய அதிபர் ஹட்டன் இலங்கை போக்குவரத்து சபை டிப்போவின் மூத்த அதிகாரிகளுக்குத் தகவல் அளித்துள்ளார். விசாரணையின் போது, சம்பந்தப்பட்ட இலங்கை போக்குவரத்து சபை பேருந்து டிப்போவில் நிறுத்தப்பட்டு, பேருந்தை சோதனை செய்தபோது, இந்திய சுற்றுலாப் பயணியின் பயண பொதி இருந்துள்ளது.

இது தொடர்பில், இந்திய சுற்றுலாப் பயணிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், அடுத்த ரயிலில், எல்ல ரயில் நிலையத்துக்கு அந்த பயண பொதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்த ரயிலில் இருந்து வந்த ஒருவர், சுற்றுலாப் பயணியின் பயண பொதியைத் தவறுதலாக எடுத்துச் சென்று, அது அவருடையது அல்ல, என்பதை உறுதி செய்ததன் பிறகு, பேருந்திலேயே விட்டுச் சென்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிப்பதாக கூறியுள்ளனர்.

பையை எடுத்துச் சென்ற நபரை அடையாளம் காண சி.சி.ரி.வி. காட்சிகளைப் பயன்படுத்தி விசாரணை நடத்தப்படும் என்று வட்டவளை பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# உலக பத்திரிகை புகைப்பட கண்காட்சி ஆரம்பம்

இலங்கையில் இரண்டு தசாப்தங்களுக்கு பின்னர் முதன்முதலில் நடைபெறவுள்ள உலக பத்திரிகை புகைப்பட கண்காட்சி கொழும்பில் வெள்ளிக்கிழமை (10) ஆரம்பமாகவுள்ளது.

2024ஆம் ஆண்டுக்கான உலக பத்திரிகை புகைப்பட கண்காட்சியை இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் நெதர்லாந்து தூதரகத்துடன் இணைந்து நடத்துகிறது.

கொழும்பில் ஆர்கேட் சுதந்திர சதுக்கத்தில் இம்மாதம் 10ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை காலை 10.30 மணி முதல் இரவு 7.00 மணி வரை கட்டணமின்றி இலவசமாகப் பார்வையிடலாம்.

யாழ்ப்பாணத்தில் கலாசார மண்டபத்தில் இம்மாதம் 24ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரையும், காலியில் மாநகர சபையில் இம்மாதம் 31ஆம் திகதி முதல்




பெப்ரவரி மாதம் 02ஆம் திகதி வரை கண்காட்சியை இலவசமாகப் பார்வையிடலாம்.

இலங்கையில் நடத்தப்படும் 2024ஆம் ஆண்டுக்கான உலக பத்திரிகை புகைப்பட கண்காட்சி தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பு புதன்கிழமை (08) கொழும்பிலுள்ள சினமன் லைப் ஹோட்டலில் நடைபெற்றுள்ளது.

ஊடக சந்திப்பில் இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் போனி ஹார்பட்ச், இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் தலைவர் குமார் நடேசன், உலக பத்திரிகை புகைப்பட கண்காட்சி முகாமையாளர் மற்றும் கண்காணிப்பாளர் மார்தா எச்செவர்ரியா கோன்சலஸ் மற்றும் சினமன் லைப் ஹோட்டல் சந்தைப்படுத்தல் பிரிவு பணிப்பாளர் ரதிஷா தளுவத்த ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.





கொழும்பில் உள்ள நெதர்லாந்து தூதரகத்துடன் இணைந்து இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், 2024 உலக ஊடக புகைப்பட கண்காட்சியை இலங்கையில் நடத்துவதில பெருமகிழ்ச்சியடைகின்றது.

61,000 க்கும் மேற்பட்ட படங்களில் இருந்து இக்கண்காட்சிக்கென தேர்ந்தெடுக்கப்பட்ட, விருதுபெற்ற புகைப்படங்கள், பேரழிவுகளை ஏற்படுத்தும் மோதல்கள் முதல் அரசியல் குழப்பங்கள், காலநிலை நெருக்கடி, புலம்பெயர்ந்தோரின் பாதுகாப்பான பயணம் வரை இன்று உலகம் எதிர்கொள்ளும் மிக முக்கியமான சில பிரச்சினைகளை ஆவணப்படுத்துகின்றன. இத்தகைய முக்கியமான கதைகளை ஒன்றிணைப்பதன் மூலம், இந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட புகைப்படங்கள் நடப்பு உலக நிகழ்வுகளைப் பற்றிய ஆழமான புரிதலையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்துகின்றன. மேலும், உலகின் ஒவ்வொரு மூலையிலும் ஊடக சுதந்திரம் எவ்வளவு அவசியம் என்பதை எமக்கு நினைவூட்டுகின்றன.

இக் கண்காட்சியானது பின்வரும் திகதிகளில் பொதுமக்களுக்கு இலவசமாக காலை 10 மணி முதல் மாலை 7 மணி வரை காட்சிப்படுத்தப்படும்.

10 - 20 ஜனவரி 2025
கொழும்பு (Arcade Independence Square)

24 - 27 ஜனவரி 2025
யாழ்ப்பாணம (Jaffna Cultural Centre)

31 ஜனவரி - 02 பிப்ரவரி 2025
காலி (Galle Municipal Hall)

08 - 10 பெப்ரவரி 2025
சினமன் லை.ஃ.ப (Cinnamon Life) கொழும்பு

புகைப்படத்தின் மூலம் கதைசொல்லும் கலையைக் கண்டு அனுபவிக்க வாருங்கள்!

worldpressphoto.org

LOCAL PARTNERS

ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் Sri Lanka Press Institute

Kingdom of the Netherlands


# சிறுமி வன்புணர்வு; 57 வயதானவர் கைது

■ என்.ஆராய்ச்சி

கேகாலை மாவட்டம் அரநாயக்க, கலாதாரா, ஹடபிமா காலனியைச் சேர்ந்த 12 வயது சிறுமி கடுமையான பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கினார் என்ற சந்தேகத்தின் பேரில், அதே காலனியைச் சேர்ந்த 57 வயது நபர் ஒருவர் வியாழக்கிழமை (08) அன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமியின் தந்தை அரநாயக்க பொலிஸில் செய்த முறைப்பாட்டையடுத்து, அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை மாவனெல்ல நீதவான் நீதிமன்றத்தில் முன்னிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# வாழ்க்கையைத் தொடங்குவதற்கு முன் தன் உயிரை இழப்பது சோகம்

ஒரு நபர் தனது வாழ்நாளில் செய்யாத குற்றத்திற்காக பணம் செலுத்த வேண்டியிருக்கலாம். அப்படி நடந்தால், அது ஒரு தீவிரமான சூழ்நிலை. பலர் தங்கள் வாழ்க்கையில் பல்வேறு நேரங்களில் இதுபோன்ற துரதிர்ஷ்டவசமான நிகழ்வுகளைச் சந்திக்க வேண்டியிருக்கலாம்.

தற்போதைய அரசாங்கமும் தான் செய்யாத தவறுக்கு விலை கொடுக்க வேண்டியிருந்தது. முந்தைய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட தரமற்ற மருந்துகளைப் பயன்படுத்தியதால், கண் பார்வை இழந்த 17 பேருக்கு தற்போதைய அரசாங்கம் இழப்பீடு வழங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

நுவரெலியா பொது மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட கண்புரை அறுவை சிகிச்சையின் போது, தரமற்ற மருந்துகளைப் பயன்படுத்தியதால் பார்வை இழந்த மற்றும் பல்வேறு கண் காயங்களுக்கு ஆளான பதினேழு பேருக்கு இரண்டரை முதல் ஒரு மில்லியன் ரூபாய் வரை இழப்பீடு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது உண்மையில் செய்த தவறுக்கான இழப்பீடு. ஆனால், ஒரு அரசாங்கமாக, பாதிக்கப்பட்டவருக்கு நீதி வழங்க வேண்டிய பொறுப்பு நமக்கு உள்ளது. தற்போதைய அரசாங்கம் அந்த சமூகப் பொறுப்பை நிறைவேற்றியுள்ளது.

இந்த தரம் குறைந்த போதைப்பொருள் கடத்தல் மேற்கொள்ளப்பட்டபோது, கெஹெலிய ரம்புக்வெல்ல நாட்டின் சுகாதார அமைச்சராக இருந்தார். அதற்கு சுகாதார அமைச்சின் பல அதிகாரிகளும் பல்வேறு வழிகளில் உதவியிருந்தனர். இதன் விளைவாக, கெஹெலிய ரம்புக்வெல்லவும் சம்பந்தப்பட்ட அதிகாரியும் சிறையில் அடைக்கப்பட்டனர், மேலும் முன்னாள் அமைச்சருக்குச் சொந்தமான சொத்துக்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

இலவச சுகாதார சேவையை நாடுபவர்களில் பெரும்பாலோர் மிகவும் ஏழ்மையானவர்கள். அவர்களின் மருந்தைத் திருடுவது மட்டுமல்லாமல், தரமற்ற மருந்தைக் கொடுத்து அவர்களை இறக்க செய்வது உண்மையிலேயே வெறுக்கத்தக்கது.

கடந்த காலங்களில் விலை மனு கோரல் நடவடிக்கைகளில் அமைச்சர்கள் பணத்தை மோசடி செய்திருப்பது அனைவரும் அறிந்த உண்மை. இருப்பினும், கடந்த காலத்தில் நியமிக்கப்பட்ட பல சுகாதார அமைச்சர்கள், நோயாளிகளுக்குத் தரமற்ற மருந்தைக் கொடுத்து அவர்களை இறக்கச் செய்வதன் மூலம் ஒரு கொடூரமான குற்றத்தை செய்யவில்லையா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

ஒரு இளம் தாய் தன் வாழ்க்கையைத் தொடங்குவதற்கு முன்பே தன் உயிரை இழப்பது ஒரு சோகம். இது மற்றொரு தீவிரமான மற்றும் சோகமான உண்மை, ஏனெனில் இது ஊழல் நிறைந்த அரசியலுடன் தொடர்புடைய விஷயம். ஒரு இளம் தாய் கமிஷன் அரசியலில் பகடைக்காயாக இறக்க நேரிட்டால், அந்த சமூகத்தில் எந்த வகையான சமூக நீதி நிலவுகிறது என்பதை நாம் கேள்வி கேட்க வேண்டியிருக்கும்.

இறந்தவர்களுக்கு அல்லது பார்வை இழந்தவர்களுக்கு இழப்பீடு வழங்குவது மட்டும் போதாது என்பதை நாங்கள் அறிவோம். போதைப்பொருள் கடத்தல் மற்றும் பல்வேறு அரசியல் மோசடிகளில் ஈடுபட்டுள்ள அனைத்து ஊழல் நபர்களையும் தண்டிப்பது சமகால சமூகத் தேவை என்பதை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம். இனி ஒருபோதும் இதுபோன்ற செய்திகளை எழுத வாய்ப்பு கிடைக்காது என்றும் நாங்கள் நம்புகிறோம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

கூண்டுக்குள் இருந்த பறவைக் குஞ்சுகள் வெளியேறும் காலம் வந்த பின்னர், தங்கள் சின்னச் சிறகுகளை அடித்த வண்ணம் சுதந்திரமாகப் பறக்கின்றன. ஆனால், மனிதர்களில் அநேகமானவர்கள் பரந்த உலகைப் பார்க்காமல், ரசிக்காமல் வீட்டுக்குள் முடங்கிய படி இருக்கின்றனர். எல்லோரும் வெளிநாடுகளுக்குப் போகும்படி அர்த்தம் இது அல்ல. உலகம் பற்றிய அறிவு, மக்கள் பற்றிய ஆர்வம், எழுச்சி மிகு தகவல்களை அறியாமல் வாழ்வது துரதிர்ஷ்டமானது.

ஒரு கிராமத்து மனிதர் எனக்குச் சொன்னார், 'நான் யாழ்ப்பாண நகரத்துக்கே போனதில்லை. எங்கள் ஊரிலேயே இருக்கின்றேன். விவசாயம் செய்கின்றேன்' என்றார்.

யாழ். மாவட்டத்திலிருந்து கொண்டு, வடக்கின் பிரதான நகரமான யாழ்ப்பாணம் போவதில்லை எனச்சொல்வது அதிசயம் அல்லவா! எப்போதாவது ஒரு சில சமயம் சென்றிருப்பார். தற்போதைய நிலை தெரியாமல் வாழும் நபர்களும் உண்டு.

வானொலியில் கூட செய்தி கேட்காதவர்கள் இருக்கின்றனர். கல்வியறிவு இல்லாதவர்கள் கூட, உலக அறிவை விரும்புகின்றனர். பொது அறிவு கூட கல்வி தான். உலகை அறிவதில் ஏது தயக்கம்?.

நன்றி–பருத்தியூர் பால. வயிரவநாதன்

பொருளாதார நெருக்கடியின் பின்னரான இலங்கை– 02

# பொருளாதார நெருக்கடி; வரலாற்று வழித்தடம்



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இலங்கையின் பொருளாதார நெருக்கடி அண்மைக்கால நிகழ்வுகளால் மட்டுமே ஏற்பட்டதல்ல. குறிப்பாக, ராஜபக்ஷக்களின் தவறான பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாலும் அதீத கடன் வாங்கலாலும் நிகழ்ந்தது என்பதே பொதுவான கருத்தாகும். ஆனால், அது முழுமையான உண்மையல்ல, பொருளாதார நெருக்கடியை விரைவுபடுத்தியதில் மகிந்த ராஜபக்ஷ ஆட்சியின் தவறுகளும் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியின் கோமாளித்தனங்களும் முக்கியப் பங்கு வகித்தன என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் அவை மட்டுமே காரணங்களல்ல. இதை விரிவாகவும் ஆழமாகவும் நாம் பார்க்கவேண்டும். ஏனெனில் புதிய அரசாங்கத்தால் பொருளாதார நெருக்கடியை சீர்படுத்த முடியும் என்று மக்கள் நம்புகிறார்கள். ஆனால் அது அவ்வளவு எளிதல்ல. இதைவிளங்க இலங்கையின் பொருளாதாரத்தின் வரலாற்றை நாம் நோக்கியாகவேண்டும்.

வரலாற்று ரீதியாக 1505இல் போர்த்துக்கீசியர்கள் நாட்டின் கடல் பகுதிகளை கைப்பற்றும் வரை, இடைக்காலத்தில் மூன்று இராஜ்யங்கள் அரசியல் அதிகாரமையங்களாக இருந்தன. இவை தென் மேற்கில் கோட்டே இராச்சியம், வடக்கில் யாழ்ப்பாண இராச்சியம் மற்றும் மத்திய மலைநாட்டில் கண்டிய இராச்சியம், முதல் இரண்டும் 1505இல் போர்த்துகீசியர்களாலும், பின்னர் 1656இல் டச்சுக்காரர்களாலும், 1796இல் ஆங்கிலேயர்களாலும் வெளிநாட்டு ஆக்கிரமிப்பிற்குப் பலியாகின. 1815இல் கண்டி இராச்சியம் ஆங்கிலேயர்களிடம் வீழ்ந்ததன் மூலம் தான் நாடுமுழுவதுமே முதன்முறையாக அந்நிய ஆட்சியின் கீழ் வந்தது. 1832ஆம் ஆண்டு கோல்புரூக் ஆணைக் குழுவினால் நாட்டின் அரசியல் மற்றும் நிர்வாக ஒருமைப்பாடு இலங்கையின் நவீன தேசிய வரலாற்றின் ஆரம்பப் புள்ளியாகக் கருதப்படலாம்.

இடைக்காலத்தில், பொருளாதார நடவடிக்கை என்பது மக்கள் தங்கள் சொந்த நுகர்வுக்காக அரிசியைப் பயிரிடுவதும், உபரியை அரசரின் திறை சேரிக்கும். நிலப்பிரபுத்துவ நில உரிமையாளர்களுக்கு வழங்குவதாகும். பழங்கால நீர்த்தேக்கங்களைச் சுற்றிபயிர்ச் செய்கை ஏற்பாடு செய்யப்பட்டது. நீர்ப்பாசனக் கால்வாய்களின் வலைப்பின்னல் அமைப்பு மூலம் வயல்களுக்கு தண்ணீர் கொண்டு செல்லப்பட்டது. இப்பகுதியில் கடல் போக்குவரத்தின் மையமாக இருந்த இலங்கை, மிக ஆரம்ப காலத்திலிருந்தே, முதலில் அரேபியர்களுடனும், பின்னர் பட்டு, பீங்கான்களுக்கு ஈடாக மற்ற நாடுகளைச் சேர்ந்த வர்த்தகர்களுடனும் மசாலாப் பொருட்கள், யானைகள் மற்றும் விலையுயர்ந்த கற்களின் வெளிநாட்டு வர்த்தக உறவுகளை ஏற்படுத்தியது. ஆனால், இந்த ஆரம்ப வர்த்தகத்தின் அளவு விரிவானதாக இருக்கவில்லை.

போர்த்துக்கீசியர்களும் பின்னர் டச்சுக்காரர்களும் இந்த ஆரம்பகால வர்த்தக நடவடிக்கைகளில் கணிசமாக விரிவடைந்து, ஐரோப்பாவின் வளர்ந்துவரும் வணிக மையங்களுக்கு ஆடம்பர நுகர்வுப் பொருட்களை முதன்மையாக வழங்கினர். இதில் முத்துக்கள், சங்கு, பாக்கு, கறுவா, கராம்பு மற்றும் சாதிக்காய் ஆகியவை அடங்கும்.

1815இல் பிரித்தானியர் நாடு முழுவதையும் கைப்பற்றியதன் மூலம், இலங்கை (சிலோன், பிரித்தானியரால் பெயரிடப்பட்டது) தொலைதூர பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குட்பட்ட இன்னொரு கொலனியாக மாறியது. அப்போதிருந்து, நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள், முக்கியமாக வேகமாக விரிவடைந்துவரும் மேற்கு ஐரோப்பிய சந்தைகளின் நுகர்வு பசி மற்றும் உற்பத்தித் தேவைகளைப் பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டிருந்தன. விவசாயிகளின் உணவுப் பயிர்ச்செய்கை குறைந்து விட்டது மற்றும் ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யும் தோட்டப் பொருளாதாரத்தால் விரைவில் வளர்ந்தது. முதலாளித்துவ உற்பத்தி மற்றும் ஏகாதிபத்திய விரிவாக்கத்தின் கருப்பையில் இருந்து பிறந்த பாரம்பரிய பொருளாதாரக் கோட்பாடு, ஒப்பீட்டு அனுகூலக் கோட்பாட்டின் அடிப்படையில் சர்வதேச வர்த்தகம் பங்குபெறும் அனைத்து நாடுகளுக்கும் நன்மை பயக்கும் என்று அதன் மரபுவழியை விரைவில் திணித்தது. குறைந்தபட்சம் ஆட்சி செய்யும் அரசாங்கமே சிறந்தது என்ற அரசியற் பொருளாதாரக் கோட்பாட்டின் அடிப்படையில் வாதிடுவதன் மூலம் தடையற்ற வணிகச் சுரண்டலுக்கு நாட்டைத் திறந்து விட்டது.

இந்த அபிவிருத்திகளை அடுத்து 1830களில் மலைநாட்டுப் பகுதிகளை கோப்பி பயிரிடுவதற்குத் திறந்து விடப் பிரித்தானிய மூலதனமும் தொழில் முனைவோரும் இலங்கைக்கு வந்தனர். 1834 மற்றும் 1849க்கு இடையில் ஏற்றுமதி செய்யப்பட்ட கோப்பியின் அளவு 26,000 பத்து மடங்கு அதிகரித்தது. இந்த அளவு அடுத்த தசாப்தத்தில் 1859இல் மீண்டும் இரட்டிப்பாகியது மற்றும் 1869இல் மீண்டும் இரட்டிப்பாகி உச்சத்தை எட்டியது. இந்த ஆண்டு முதல் இலங்கையில் கோப்பிப் பயிர்ச் செய்கை வேகமாக வீழ்ச்சியடைந்தது. 1885ஆம் ஆண்டளவில் கோப்பித் தொழிலை முற்றிலும் அழித்த நோய் பரவியது.

வெளிநாட்டு மூலதனம் மற்றும் முகாமைத்துவத்தினால் ஏற்றுமதிக்கான கோப்பி பயிர்ச் செய்கை முறையை நிறுவியதன் மூலம் இலங்கையில் முதன் முறையாக வெளிநாட்டு வர்த்தகம், முதலாளித்துவ உற்பத்தி, நிரந்தர தொழிலாளர் சக்தி மற்றும் குறைந்த ஊதியம் போன்றவற்றில் தங்கியிருக்கும் புதிய பொருளாதாரம் இலங்கையில் உருவாக்கப்பட்டது. இதைத் தக்கவைப்பதற்கு நாட்டில் நிலவும் தன்னிறைவு அரிசி உற்பத்தியும் வளரும் கிராமப் பொருளாதாரமும் எதிரானவையாகும். எனவே, உள்ளூர் பொருளாதாரத்தை சிதைப்பதன் மூலம் குறைந்த கூலி உழைப்பையும் நிரந்தர தொழிலாளர் சக்தியையும் தக்கவைக்கலாம் என்பதை புதிய முதலீட்டாளர்கள் நன்கு அறிந்திருந்தனர். இதற்கு ஏதுவாக சட்டங்களை இயற்றவும் நடைமுறைகளை மாற்றவும் கொலனியநிர்வாகம் தொடங்கியது.

இதன் வழி உருவாக்கப்பட்ட புதிய பொருளாதார நடத்தை முறைகள் மற்றும் நடைமுறையில் உள்ள பொருளாதார அமைப்புக்கு அந்நியமான பல கருத்துக்களைக் கொண்டு, நடைமுறையில் இருக்கும் சுயச்சார்பு தன்னிறைவுக் கட்டமைப்பின் அடித்தளத்தை விரைவாக அழிக்கப்பட்டன. இந்த மாற்றத்துடன் தான் இலங்கையின் நவீன பொருளாதார வரலாறு அதன் தொடக்கத்தைப் பெறுகிறது. ஒருவீரியம் மிக்க வணிக விவசாயம் விரைவில் மக்களின் பழைய நாட்டங்களை முக்கியத்துவமற்றதாக மாற்றியது. அதேவேளை, சில ஆண்டுகளில் கோப்பி அரசாங்கத்தின் வருமானத்தில் கிட்டத்தட்ட மூன்றில் ஒருபங்கை வழங்கியது. பிரித்தானிய நிர்வாகத்தின் மிகவும் விருப்பமான குழந்தையாக மாற்றும் அளவுக்கு அதன் பங்கு பெரியதாக இருந்தது. அடுத்தடுத்த ஆண்டுகளில், தோட்டக்காரர்களின் பிரச்சினைகள் நாட்டின் பிரச்சினைகளுக்கு ஒத்ததாகக் கருதப்பட்டன, மேலும், அவற்றைத் தீர்க்கும் தேடலில் அரசாங்கம் மாற்றங்களைத் திடுக்கிடும் வேகத்துடன் அறிமுகப்படுத்தப்பட்டது.

'19ஆம் நூற்றாண்டின் பெரும்பகுதியில் கோப்பிப் பயிர் செய்கையார்களின் தாளத்திற்கு சிலோன் நடனமாடியது என்பது இலங்கையின் பொருளாதார வரலாறு பற்றி எழுதுவோர் சொல்கின்ற ஒரு விடயமாகும். செயல்பாட்டில் ஒரு புதிய பொருளாதார அமைப்பு மெதுவாக உருவாகத் தொடங்கியது. உற்பத்திக் காரணிகள் - நிலம், உழைப்பு மற்றும் மூலதனம் - ஒரு புதிய பொருளைப் பெற்றன. சாலைகள், புகையிரதங்கள் மற்றும் துறைமுகங்கள் முன்பு இல்லாத இடத்தில் தோன்றின. அரசியல் விவகாரங்கள் ஒரு புதுமையான முக்கியத்துவத்துடன் முதலீடு செய்யப்பட்டன. இந்தச் செயன்முறையின் நவீன அர்த்தத்தில் வர்க்கம் அதன் மெதுவான வளர்ச்சியைத் தொடங்கியது. இந்த முன்னேற்றங்களுடன் ஒருபணப் பொருளாதாரம் உருவானது. அது, அதனுடன் விலைகள், இலாபம், ஊதியங்கள், வாடகை மற்றும் கடன் பற்றிய நனவைக் கொண்டு வந்தது.

கோப்பித் தோட்ட பொருளாதாரம் பெரிய அளவிலான பயிர்ச் செய்கை மற்றும் தோட்ட நிர்வாகத்தை அடிப்படையாகக் கொண்டது. அந்தக் காலத்தின் சராசரி கோப்பி எஸ்டேட் சுமார் 100 ஏக்கர் பரப்பளவில் இருந்தது. 1844இல் கூட, ஒரு காபி தோட்டத்தை நிறுவுவதற்கான குறைந்த பட்ச செலவு 3,000 ஸ்ரேலிங் பவுண்கள். இவற்றுக்கான ஆரம்ப மூலதனம் பிரிட்டனில் இருந்துவந்தது, ஆனால், பின்னர் நாட்டில் உள்ள பிரிட்டிஷ் வங்கிகள் கோப்பிப் பயிர்ச் செய்கைக்குத் தேவையான பணத்தைக் கடனாக அளித்தன. ஏறக்குறைய உடனடி செழிப்பு காரணமாக, இலாபத்தின் மறு முதலீடு உச்ச காலத்தில் மூலதனத்தின் முக்கிய ஆதாரமாக மாறியது. எனவே கோப்பித் தொழில் துறையின் பெரும் விரிவாக்கம் பிரிட்டனில் இருந்து எந்த குறிப்பிடத்தக்க மூலதன ஏற்றுமதியாலும் நிதியளிக்கப்படவில்லை. ஆனாலும், கோப்பிப் பயிர்ச் செய்கை தந்த இலாபம், இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்பிலும் சமூகக் கட்டமைப்பிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியது.

அதிக இலாபத்திற்கான அவா, மேலதிக நிலங்களின் தேவையையும் ஏராளமான மனித உழைப்பையும் கோரிநின்றது. இதற்கான கொலனித்துவ அரசாங்கம் சில சலுகைகளைப் பிரித்தானிய தோட்ட நிர்வாகத்திற்கு வழங்கியது. சில சட்டங்களை இயற்றியது. இவை இன்று வரை இலங்கையின் மிகவும் சிக்கலான சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளாக நிலைத்துள்ளன.

## கடிதங்கள்

### சுற்றுச்சூழலுக்கு கடும் பாதிப்பு



காசல்ரீ நீர்த்தேக்கத்திற்கு முக்கிய நீர் ஆதாரமாக இருக்கும் கெசல்கமுவ ஓயா அருகே, மாணிக்கக்கற்கள் அகழும் குழு ஒன்று சட்டவிரோதமாக இரவும் பகலும் மாணிக்கக்கற்கள், மணல் மற்றும் சரளை அகழ்ந்து வருவதாகவும், இதனால் பெரும் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுவதாகவும் நோர்வூட் குடியிருப்பாளர்கள் கூறுகின்றனர்.

அவர்கள் உரிமம் இல்லாமல் இதைச் செய்கிறார்கள் மற்றும் மணல் மற்றும் சரளைக் கற்களை கெசல்கமுவ ஓயாவில் கழுவுவதால் காசல்ரீ நீர்த்தேக்கம் மாசடைகின்றது.

பொகவந்தலாவ, மஸ்கெலியா, ஹட்டன் மற்றும் நோர்வூட் ஆகிய பகுதிகளில் வசிக்கும் முக்கிய மாணிக்கக்கற்கள் குழுவினால் நடத்தப்படும் இந்த சட்டவிரோத மாணிக்கக்கற்கள் அகழ்வு, நோர்வூட்டில் உள்ள போற்றி தோட்டத்திலிருந்து பாயும் கால்வாய் அருகே கிட்டத்தட்ட 100 பேரைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுவதாக உள்ளூர்வாசிகள் தெரிவிக்கின்றனர்.

நோர்வூட் பொலிஸ் அதிகாரிகள் அந்த இடத்திற்கு கடந்த 8ஆம் திகதி சென்றபோது, மாணிக்கக்கல் சுரங்கத் தொழிலாளர்கள் குழு ஒன்று தப்பிச் சென்றதுடன், கடத்தல்காரர்கள் பயன்படுத்திய பல உபகரணங்களையும் நோர்வூட் காவல்துறையினர் கைப்பற்றினர்.

– ரஞ்சித் ராஜபக்ஷ

SLT–MOBITEL Nebula Institute of Technology

# பட்டமளிப்பு ஊடாக வலுவூட்டல்



SLT-MOBITEL இன் கல்விப் பிரிவான SLT-MOBITEL Nebula Institute of Technology, தனது வருடாந்த பட்டமளிப்பு விழாவை அண்மையில் முன்னெடுத்திருந்தது. கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் பிரதான கேட்போர்கூடத்தில் இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. தமது உயர் கல்வியை பூர்த்தி செய்த பட்டதாரிகளுக்கு பட்டமளிக்கும் வைபவத்தினூடாக அவர்களின் எதிர்கால முன்னேற்றத்துக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் வழிகோலப்பட்டிருந்தது. வர்த்தக நாமத்தின் மீளறிமுகத்தைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட முதலாவது பட்டமளிப்பு வைபவமாக இந்நிகழ்வு அமைந்திருந்ததுடன், கல்வியகத்தைப் பொறுத்தமட்டில் முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல்லாகவும் அமைந்திருந்தது.

நிகழ்வின் சிறப்பு அதிதியாக பிரித்தானியாவின் ஹேர்ட்ஃபோட்ஷயர் பல்கலைக்கழகத்தின் பௌதீகவியல், பொறியியல் மற்றும் கணனி விஞ்ஞான பாடசாலையின் பீடாதிபதி பேராசிரியர். டேனியல் மெக்கிளஸ்கி கலந்து கொண்டதுடன், விசேட உரையையும் ஆற்றியிருந்தார்.

பல்வேறு சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொறியியல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்துடன் தொடர்புடைய கற்கைகளை கல்வியகத்தில் பூர்த்தி செய்திருந்த மாணவர்களுக்கு இந்த வைபவம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல்லாக அமைந்திருந்தது. இந்தக் கற்கைகளில், பிரித்தானியாவின் ஹேர்ட்ஃபோட்ஷயர் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட BEng (Hons) பட்டக் கற்கை மற்றும் BTEC Higher National Diploma (HND) in Electrical and Electronic Engineering மற்றும் பிரித்தானியாவின் Pearson இனால் வழங்கப்படும் BTEC Higher National Diploma (HND) in Digital Technologies போன்றனவும் அடங்கியிருந்தன. இந்த ஆண்டின் நிகழ்வு இலங்கையின் அடுத்த தலைமுறை தொழினுட்ப தலைமுறையை ஊக்குவிக்கும் உறுதிமொழியை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது.

இந்த பட்டமளிப்பு விழாவில், 159 பட்டதாரிகளுக்கு பட்டம் சூடப்பட்டிருந்தது. இதில் 23 பேர் SLT-MOBITEL இன் ஊழியர்களாக திகழ்கின்றனர். இலங்கையின் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப துறையின் விருத்திக்கு ஆதரவளிக்கும் SLT-MOBITEL இன் அர்ப்பணிப்புக்கான எடுத்துக்காட்டாக இந்நிகழ்வு அமைந்திருந்தது. குறிப்பாக மாணவர்களுக்கு பொறியியல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப பிரிவுகளில் தமது தொழில்வாழ்க்கையை வழியமைத்துக் கொள்வதில் உதவுவதற்கு அதிகளவு கவனம் செலுத்தப்பட்டிருந்தது. பிராந்தியத்தில் தொழினுட்ப மையமாக திகழ இலங்கை முயற்சிக்கும் காலகட்டத்தில், SLT-MOBITEL Nebula Institute of Technology போன்ற நிறுவனங்களின் நிலை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

கல்விச் சிறப்பை கொண்டாடும் வகையில், மூன்று மாணவர்களுக்கு விசேட கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது. பிரித்தானியாவின் ஹேர்ட்ஃபோட்ஷயர் பல்கலைக்கழகத்தின் Bachelor of Engineering (Honours) in Electrical and Electronic Engineering கற்கையில் சிறப்பாக செயலாற்றியிருந்த சிறந்த மாணவருக்கான விசேட விருது ஹபரகடகே ஜனக சத்துரங்க அபேவர்தனவுக்கு வழங்கப்பட்டிருந்தது. Pearson BTEC தகைமைகளில், Level 5 Higher National Diploma in Engineering (Electrical and Electronic Engineering) இல் சிறந்த கல்விசார் செயற்பாட்டுக்கான தங்கப் பதக்கத்தை ஹெட்டி ஆரச்சிகே திலீஷ ஷெனால் அஹின்ச பெரேரா பெற்றுக் கொண்டார். Level 5 Higher National Diploma in Digital Technologies இல் சிறந்த கல்விசார் செயற்பாட்டுக்கான தங்கப் பதக்கத்தை உடவல ஹேவாயலாகே இரேஷா தில்ருக்ஷி டி சில்வா பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வு PEO TV நாளிகை 20 ஊடாக நேரலையாக ஒளிபரப்பு செய்யப்பட்டது. YouTube மற்றும் Facebook Live ஊடாகவும் இந்நிகழ்வு காட்சிப்படுத்தப்பட்டதுடன், நிகழ்வில் பரந்தளவானோர் இணைந்து கொள்வதற்கு ஏதுவாக அமைந்திருந்தது. மாணவர்களின் சிறந்த சாதனைகளின் கொண்டாட்டமாக இந்த பட்டமளிப்பு வைபவம் அமைந்திருந்தது. மேலும், Nebula Institute இன் கல்வி மற்றும் மாணவர்களுக்கு தமது பொறியியல் கனவுகளையும், எதிர்கால வெற்றிகளையும் எய்துவதற்கு உதவுவதாகவும் அமைந்திருந்தது.

இலங்கையில் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப கல்வியை பொறுத்தமட்டில் SLT-MOBITEL Nebula Institute of Technology முன்னோடியாக திகழ்கின்றது. தொழினுட்ப துறையின் வளர்ந்து வரும் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு பரந்தளவு கற்கைகளை வழங்குகின்றது. மாணவர்களுக்கு கோட்பாட்டு அறிவு மற்றும் பிரயோக திறன்களை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் கற்கைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. வேகமாக மாற்றமடைந்து வரும் தொழினுட்ப கட்டமைப்பில் வெற்றிகரமான தொழில் வாய்ப்புகளுக்கு தம்மை தயார்ப்படுத்திக் கொள்ள மாணவர்களுக்கு உதவுகின்றது. Robotics and Artificial Intelligence, Data Scienceமற்றும் Digital Technologies போன்ற எதிர்கால தொழில் சந்தைகளுக்கு பொருத்தமான பரந்தளவு கற்கைகளை கல்வியகம் வழங்குகின்றது.

# இலங்கையின் வலிமையான வங்கியாக கொமர்ஷல் வங்கி



The Asian Banker சஞ்சிகையின் தாய் நிறுவனமான TAB Global இன் உலகளாவிய ஆய்வு மற்றும் ஆலோசனை துணை நிறுவனமான TAB இன்சைட்ஸ் ஆண்டுதோறும் வெளியிடும் மதிப்புமிக்க உலகளாவிய தரவரிசையில் கொமர்ஷல் வங்கி இலங்கையின் வலிமையான வங்கியாக மீண்டும் மதிப்பிடப்பட்டுள்ளது.

வலுவான வங்கிகள் தரவரிசையானது விரிவான மற்றும் வெளிப்படையான மதிப்பெண் அட்டையை அடிப்படையாகக் கொண்டது, இது வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களை இருப்புநிலை செயல்திறனின் 14 விசேட பிரதான பெறுபேறுகளை உள்ளடக்கிய நிலையில் அளவிடும் திறன், இருப்புநிலை வளர்ச்சி, இடர் விவரக்குறிப்பு, இலாபம், சொத்து தரம் மற்றும் பணப்புழக்கம் ஆகிய ஆறு அளவுகோல்களின் அடிப்படையில் தரவரிசைப்படுத்துகிறது.

கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான திரு சனத் மனதுங்க குறிப்பிடுகையில், “வலிமையான வங்கிக்கான மதிப்பீடானது கடுமையான விதிகளுக்கு உட்பட்டதும் விசாலமானதுமாகும். இது வங்கிகள், முதலீட்டாளர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் கட்டுப்பாட்டாளர்களுக்கு நம்பகமான அளவுகோலாக அமைகிறது. TAB இன்சைட்ஸினால் இலங்கையின் வலிமையான வங்கியாக தரவரிசைப் படுத்தப்பட்டிருப்பது கொமர்ஷல் வங்கி குழுவில் உள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும் மிகவும் பெருமைக்குரியதாகும், ஏனெனில், நாங்கள் சேவை செய்யும் சமூகங்கள் மற்றும் அனைத்து பங்குதாரர் குழுக்களுக்கான எங்கள் கடமைகளை நிறைவேற்ற நாங்கள் முயற்சி செய்கிறோம்.

ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் அந்தந்த நாடுகளில் உள்ள வலுவான வங்கிகளாக 2024இல் வலிமைக் குறியீட்டில் கொமர்ஷல் வங்கியுடன் ANZ குழுமம் (அவுஸ்திரேலியா), சீனா வர்த்தக வங்கி (சீனா), கோடக் மஹிந்திரா வங்கி (இந்தியா), மீசான் வங்கி (பாகிஸ்தான்), OCBC வங்கி (சிங்கப்பூர்), சுமிடோமோ மிட்சுய் நிதிக் குழு (ஜப்பான்), மண்டிரி வங்கி (இந்தோனேசியா) மற்றும் பொது வங்கி (மலேசியா) ஆகியன தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.

கொமர்ஷல் வங்கியானது உலகின் தலைசிறந்த 1,000 வங்கிகளில் முதல் வங்கியாகும், மேலும் கொழும்பு பங்குச் சந்தையில் வங்கித் துறையில் அதிக சந்தை மூலதனத்தைக் கொண்டுள்ளது. வங்கியானது இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி (SME) துறைக்கு மிகப்பெரிய கடனுதவி வழங்குவதோடு, டிஜிட்டல் புத்தாக்கங்களில் முன்னணியில் உள்ளது. மற்றும் இலங்கையின் முதல் 100மூ கார்பன்நடுநிலைமை வங்கியாகும். கொமர்ஷல் வங்கியானது நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள கிளைகள் மற்றும் தானியங்கி இயந்திரங்களின் வலையமைப்பைச் செயல்படுத்துகிறது, மேலும் இலங்கை வங்கிகளுக்கிடையில் பரந்த சர்வதேச வலையமைப்பைக் கொண்டுள்ளது, பங்களாதேஷில் 20 வங்கிக்கிளைகள், மியன்மாரில் ஒரு நுண்நிதி நிறுவனம் மற்றும் மாலைத்தீவில் பெரும்பான்மையுடன் கூடிய முழு அளவிலான முதற்தர வங்கி ஆகியவையாகும் என்றார்.



## வீட்டுக் குடில்கள்

மாட்டுத் தொழுவத்தில்
மலர்ந்தருள் ஈசனை
மனிதர் நாம் தொழுகிறோம்
மாக்களாய் ஊரதில் மானிடர்
பேரினில் முடங்கிடும்
ஏழைகள் ஒடுங்கி
ஒதுங்கிறார் வீட்டுக் குடில்களில்

புகலிடம் அற்றவர் சேறுகள்
சகதியில் புகுமிடம் ஒதுக்கிடம்
சேரியே வாழ்விடம் அடைக்கலம்
கொட்டிலில் அதனினுள் சர்வமும்
அடிமைபோல் மாய்கிறார்
அழிகிறார் மந்தையாய்

அடிமைகள் போலவே
அடக்கி வைத்தவர்
அடித்துப் பறித்தவர்
உரிமைகள் யாவையும்
பட்டினி பசியோடு
படும்துயர் அறியினும்
வாட்டிவதைப்பதில்
வீண்கர்வம் அடுக்குமோ

தேவைகள் கண்டவர் தேற்றிடும்
போர்வையில் தேடிடும் அரசியல்
அரசினர் பணிமனை
காடுகள் மேடுகள் குழிகள்
பள்ளங்களாய்க்
குப்பைக் கழிவதைக்
கொடுத்துப் பேர்வாங்கிறார்

குடிநீர் கழிவறை கல்வி
வசதிகள் கிடையா
ஒதுக்கிடம் அவர்வாழ் இருப்பிடம்
கடல்போல் பெருவெள்ளம்
பொசியும் மழையிலும்
கல்லும் முள்ளுமாய்க்
கடப்பதே அவர்கதி

ஓட்டையும் ஒழுகலும்
கிழிந்த பாய்களும்
ஒட்டியே ஈரம் கசிந்திடும்
சுவர்களும் ஒளியே புகுந்திடா
இருட்டுத்தரையுடன்
மாளிகை வீடவர்
பேரினில் மனிதர்கள்


ஏங்கித் தவித்திடும்
ஏழைகள் கதறல்கள்
ஏனோ தலைக்கனம்
எம்மோடிணைந்தது
காலம் காலமாய்
குட்டையில் மட்டைபோல்
கண்ணை மறைப்பது
கலந்த எம்சாதியம்

வாழ்வினில் விடிவுகள் விடிவெள்ளி
வடிவினில் வித்திடும் விளைவுகள்
வெளிப்படை மாற்றமும் வறுமையும்
வஞ்சகர் வீம்புகள் விலகவும்
வசந்தமாய் வந்திட
வேண்டுவோம் விரைவினில்

அணுகுவோம் எம்மை
நாம் அன்பினால் பண்பினால்
அவ்வழி நல்வழி
எமைத் தொடர்வழியினர்
அநீதிகள் அகற்றியே
அணிசேர்ந்தொற்றுமை
அறத்தினை நாடுவோம்
ஒருகுடி மக்களாய்

கலாநிதி மு.ந.சிவச்செல்வன்
ஆக்லாந்து, நியூ சிலாந்து





## வழக்கு

இந்த
காற்றுக்கும்
எனக்கும்
எல்லைச்
சண்டை

எப்போது
பார்த்தாலும்
தீண்டல்
விலகல்
வாசம்
சுவாசம் - என
எல்லை மீறி

அந்த
சுருண்ட
முடிக்காரியை
நினைவூட்டிச்
செல்வதால்...

இனி
வழக்குத்
தொடர்வதை
தவிர
எனக்கு
வேறு
வழியில்லை

சிட்டு






## ஏக்கம்

சும்மா நீட்டி
மேசையில் படர்ந்து கிடந்த
காகிதம்
மழையை பொழிய செய்த
வானத்தை கப்பல் செய்து
கரையேற்றினாய்
இழவு எடுத்த காதலுக்காய்
கவிதை ஒன்றை எழுதினாய்
அடுத்த வாங்கு தேவதைக்கு
அப்பப்ப ஒரு ரொக்கெட்
ஒரு பட்டமாக்கத்தான்
உன்னால் முடிவதில்லை
உயரப்பறக்கும்
ஓர்நாள் ஆசை
மரத்தில் சிக்கி சிதையும்
அற்புத கணங்கள்
எட்டாத தொலைவு எனக்கும்
உனக்கும்.

லலித்தா





## சிற்பத்தின் சிறப்பு

ஐயுடல் ஓர்தலை யாகிய
அற்புதம்
மெய்யா யிதுதான் மேன்மையின்
மகத்துவம்.
பொய்யெனப் புலன்களைப் பகருமே
தத்துவம்
வையகந் தன்னிலே வாழ்க்கையின்
சித்திரம்
கையுளி வடித்தநற் கவிதையின்
வடிவமோ
ஐயமில் சிற்பத்தின் ஆனந்தச்
சுடரிதோ
உய்யுமே தமிழினம் உணர்வுடைக்
கலைகளால்
சையதன் ஒளியெனச் சகமெலாம்
பரவியே...

கந்தவனம் கோணேஸ்வரன்



அமெரிக்கா

காட்டுத்தீ பரவல் தீவிரம்:

# அவசரநிலை பிரகடனம்

அமெரிக்க லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் காட்டுத் தீ வேகமாக பரவி வருவதை அடுத்து, ஐந்து பேர் உயிரிழந்துள்ளதுடன், 50க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

இதையடுத்து, காற்றின் வேகம் குறையாததால், கலிபோர்னியாவில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த காட்டுத்தீ லொஸ் ஏஞ்சல்ஸ் நகரின் கடற்கரை பகுதியில் முதலில் பரவ ஆரம்பித்தது. கடற்கரை பகுதிகளில் காற்றின் வேகம் அதிகமாக இருப்பதால், காட்டுத்தீ மலைப்பகுதிகளுக்கு வேகமாகப் பரவி வருகிறது.

இதனால் அங்கு கடும் புகைமூட்டம் நிலவி வருகிறது. காட்டுத்தீயால், ஆயிரத்துக்கும் மேற்பட்ட கட்டிடங்கள், வாகனங்கள் நாசமாகியுள்ளன. காட்டுத் தீயை அணைக்க தீயணைப்பு வீரர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். மேலும், இதனால் 30 ஆயிரம் கட்டிடங்கள் வரை பாதிப்புக்கு உள்ளாகும் என அஞ்சப்படுகிறது

மேலும், அப்பகுதி வீடுகளில் வசித்து வந்த 26 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தீயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த காட்டுத்தீக்கு ஹொலிவூட் நடிகர், நடிகைகள் உள்ளிட்ட பிரபலங்கள் பலரின் வீடுகளும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றன.

மேலும், சுமார் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடியிருப்பு வாசிகள் வேறு இடங்களுக்கு செல்லும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. லொஸ் ஏஞ்சல்ஸ் கவுண்டியில் 46 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மின்சாரம் இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த காட்டுத்தீ காரணமாக, சுமார் ஒரு இலட்சம் பேர் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளனர். காட்டுத்தீயால் 50க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.



காற்றின் வேகம் குறையாததால், கலிபோர்னியாவில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்படுவதாக, ஆளுநர் கவின் நியூசம் தெரிவித்துள்ளார்.

புதன்கிழமை (8) இரவு காற்றின் வேகம் குறையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும், நேற்று வியாழக்கிழமை வரை, நிலைமை மோசமாகவே இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

காட்டுத் தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ள லொஸ் ஏஞ்சல்ஸ் கவுண்டி தீயணைப்புத் துறையினர் கூறும் போது,

“எங்களால் முடிந்த எல்லாவற்றையும் செய்கிறோம். ஆனால், இத்தகைய காட்டுத் தீயைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான தீயணைப்பு வீரர்கள் அனைத்து துறைகளிலும் இல்லை” என்று தெரிவித்துள்ளனர்.

காட்டுத்தீ காரணமாக பரவலான அழிவு ஏற்பட்டு, அங்கு வசித்து வரும் மக்கள் தங்களின் வீடுகளை விட்டு வெளியேறும் கட்டாயத்துக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதனிடையே, ஹொலிவூட்டுக்கான குறியீடாக விளங்கும் ஹொலிவூட் மலைகளில், சன்செட் என்றழைக்கப்படும் புதிய தீ வேகமாக பரவி வருகிறது.

லொஸ் ஏஞ்சல்ஸ் தீயணைப்புத்துறையின் கூற்றுப்படி, சன்செட் தீ தற்போது 20 ஏக்கர் வரை பரவியுள்ளது. மேலும் அது ரன்யான் கன்யோன் முதல் வாட்டலஸ் பார்க் இடையேயான பகுதியை எரித்து நாசமாக்கியுள்ளது. ஹொலிவூட் அடையாளத்தை தவிர்த்து, ஆண்டு தோறும் ஆஸ்கார் விருதுகள் வழங்கும் விழா நடைபெறும் டோல்பி தியேட்டரும் சன்செட் தீ தாக்கும் அபாயத்தில் உள்ளது. அதேபோல் ஹொலிவூட்டின் பிற அடையாளங்களான, ஹொலிவூட் பவுல் வெளிப்புற ஆம்பிதியேட்டர் மற்றும் ஹொலிவூட் வாக் ஆஃப் ஃபேம் போன்றவையும் தீ தாக்கும் அபாயத்தில் உள்ளன.

புதிய தீ பரவல் காரணமாக லாரல் கன்யான் பவுல்வார்ட் முதல் முல்ஹேல்லண்ட்-ன் சில பகுதிகளில் கட்டாய வெளியேற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அது பிரபலங்களின் குடியிருப்புக்கு பெயர் பெற்ற ஹொலிவூட் பவுல்வர்ட் தெற்கே வரை நடைமுறைப்படுத்தப்பட்டது.

> **அப்பகுதி வீடுகளில் வசித்து வந்த 26 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தீயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த காட்டுத்தீக்கு ஹொலிவூட் நடிகர், நடிகைகள் உள்ளிட்ட பிரபலங்கள் பலரின் வீடுகளும் பாதிப்புக்குள்ளாகி உள்ளன**

இலங்கை டெஸ்ட் தொடருக்கு

# ஸ்டீவ் ஸ்மித் தலைமை




அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கிரிக்கெட் விளையாட உள்ளது. இந்நிலையில், இந்த சுற்றுப்பயணத்தின் டெஸ்ட் தொடருக்கான அணியை கிரிக்கெட் ஆஸ்திரேலியா அறிவித்துள்ளது. இரு அணிகளும் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளன. இந்த இரண்டு போட்டிகளும் கண்டி பல்லேகல மைதானத்தில் நடைபெறுகிறது. இந்த சூழலில் டெஸ்ட் தொடருக்கான அணியை ஆஸ்திரேலியா அறிவித்துள்ளது. அந்த அணியின் கேப்டன் பாட் கம்மின்ஸ் இதில் விளையாடாத காரணத்தால் அவருக்கு பதிலாக அணியை ஸ்டீவ் ஸ்மித் வழிநடத்துகிறார்.

ஆஸ்திரேலிய அணி இலங்கைக்கு எதிராக இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும், ஒரே ஒரு ஒருநாள் போட்டியிலும் விளையாடுகிறது. முதல் டெஸ்ட் போட்டி ஜனவரி 29ஆம் திகதி தொடங்குகிறது. இரண்டாவது டெஸ்ட் பெப்ரவரி 6 அன்றும், ஒருநாள் போட்டி பெப்ரவரி 13 அன்றும் நடைபெறுகிறது. ஆஸ்திரேலிய அணி விவரம்: ஸ்டீவ் ஸ்மித் (கேப்டன்), அபாட், ஸ்காட் போலண்ட், அலெக்ஸ் கேரி, கூப்பர் கோனொலி, டிராவிஸ் ஹெட், ஜாஷ் இங்கிலிஸ், உஸ்மான் கவாஜா, சாம் கான்ஸ்டாஸ், மாட் குஹ்னெமன், மார்னஸ் லபுஷேன், நாதன் லயன், நாதன் மெக்ஸ்வீனி, டாட் மர்பி, மிட்செல் ஸ்டார்க், வெப்ஸ்டர் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

# மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியும் கௌரவிப்பும்

சிவா ஸ்ரீதரராவ்

நாவிதன்வெளி கோட்டத்தில் உயர்தர பாடசாலைகளிலிருந்து பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான மாணவர்களைக் கௌரவிக்கும் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஞாயிற்றுக்கிழமை (05) நடைபெற்றது.

நாவிதன்வெளி லைசியம் கல்வியகத்தின் செயற்பாட்டாளர் சதாசிவம் சிவசங்கர் தலைமையில் நாவிதன்வெளி பாமடி பொது விளையாட்டு மைதானத்தில் இப்போட்டி இடம்பெற்றது.

இதில் களுதாவளை கெனடி விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தையும் ஏழாம் கிராமம் எதிரொலி விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தையும் வெற்றி கொண்டது.

இதன்போது வெற்றி பெற்ற அணிக்கு வெற்றிக் கிண்ணம் வழங்கி கௌரவிப்பதையும் மற்றும் நாவிதன்வெளி கோட்டத்தில் உயர்தர பாடசாலைகளிலிருந்து 2023 - 2024 கல்வி ஆண்டு பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.



கேரளா

மசூதி விழாவில் மிரண்ட யானை

## ஒருவர் மீது தாக்குதல்; 16 பேர் காயம்

கேரளாவின் மலப்புரம் மாவட்டத்தின் திரூர் பகுதியில் உள்ள மசூதி ஒன்றில் நடைபெற்ற விழாவில், யானை ஒன்று மிரண்டு ஒருவரைத் தாக்கியுள்ளது.


மேலும், இச்சம்பவத்தால் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 16 பேர் காயமடைந்துள்ளனர்.

குறித்த மசூதியில், ‘புதியங்காடி’ என்ற விழா, புதன்கிழமை (8) நடைபெற்றது. இதில் நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றனர். இந்த விழாவுக்கு 5 அலங்கரிக்கப்பட்ட யானைகள் அழைத்து வரப்பட்டிருந்தன.

திருவிழாவில் பங்கேற்ற மக்கள் யானையை தங்கள் அலைபேசியில படம் பிடிக்க முயன்றனர். இதில் ஸ்ரீ குட்டன் என்ற ஒரு யானை மிரண்டு கூட்டத்தினரைத் தாக்கத் தொடங்கியது. இதில், ஒருவரை யானை துதிக்கையால் தூக்கி வீசி எறிந்தது. இதில் அவர் படுகாயமடைந்து, ஆபத்தான நிலையில், கோட்டக்கல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யானை மிரண்டதைப் பார்த்து திருவிழாவில் பங்கேற்றவர்கள் பீதியில் அந்த இடத்தை விட்டுத் தப்பியோட முயன்றுள்ளனர். இதனால் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 16 பேர் காயமடைந்துள்ளனர்.

இதையடுத்து, மிரண்ட யானையை பாகர்கள் சிலர் சங்கிலியால் கட்டி இழுத்துக் கட்டுப்படுத்தினர். யானையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர சுமார் 2 மணித்தியாலங்கள் ஆனமை குறிப்பிடத்தக்கது.



சவூதி அரேபியா

சவூதியில் மீண்டும்

## அடைமழைக்கு எச்சரிக்கை

சவூதி அரேபியாவில் மீண்டும் அடைமழை பெய்யும் என்று, அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சவூதி அரேபியாவில், ஆண்டுக்கு மிகக் குறைவான அளவே மழைப் பதிவாகும். சராசரியாக ஆண்டுக்கு 10 மில்லிமீற்றர் மழை பெய்வதே பெரிய விடயம் ஆகும். தற்போது பருவநிலை மாற்றம் காரணமாக சவூதி அரேபியாவில் அவ்வப்போது கனமழை கொட்டித் தீர்த்து வருகிறது. இரண்டு நாட்களில் சவுதியில் 4.9 மில்லிமீற்றர் மழை பெய்துள்ளது. அதேபோல் ஜெட்டா நகரில் 3.8 மில்லி மீற்றர் மழைப் பதிவாகியுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் பெய்த அடைமழையால் வீதிகள் அனைத்தும் ஆறுகள் போல் காட்சி அளித்தன. குடியிருப்புகளுக்குள் வெள்ள நீர் புகுந்து மக்கள் பெரும் அவதிக்கு ஆளாயினர். இந்த அடைமழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக ஓமனில் 21 பேரும் ஐக்கிய அரபு அமீரகத்தில் 4 பேரும் உயிரிழந்தனர்.

இந்நிலையில் தற்போது சவுதி அரேபியாவில் மீண்டும் அடைமழைக்கு வாய்ப்பு உள்ளதாக, அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சவூதி தேசிய வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட தகவலின்படி, இந்த வாரம் முழுவதும் மிதமானது முதல் இடியுடன் கூடிய அடைமழை பெய்யக்கூடும். கிழக்கு மாகாணத்தில் சில பகுதிகளில் ஆலங்கட்டி மழை மற்றும் தூசி நிறைந்த காற்றுடன் கூடிய மழை பெய்யக்கூடும். அவற்றில் கிழக்கு நகரங்களான அல் அஹ்ஸா, ஜுபைல், அல் கோபார், தம்மாம் மற்றும் கதீப் ஆகியவை அடங்கும். மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அடைமழை காரணமாக, சவூதி அரேபியாவில் பொது இடங்களுக்கு மக்கள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணம் மற்றும் ரியாத்தில் உள்ள பாடசாலைகளுக்கு இணையவழி வகுப்புகளை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், அடைமழையால் துபாய் விமான நிலையமும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. விமான நிலையம் முழுவதும் வெள்ளம் சூழ்ந்துள்ளதால் ஏராளமான விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

சவூதி அரேபியாவில், மழையால் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கு குறித்த வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. புனித நகரமான மக்கா மற்றும் ஜெட்டா நகரங்கள் வெள்ளத்தில் தத்தளிக்கின்றன.

மழையோடு அவ்வப்போது பலத்த காற்றுடன் ஆலங்கட்டி மழையும் பெய்து வருகிறது. சவூதி அரேபியா முழுவதும் பல பகுதிகளில் வரலாறு காணாத அளவில் மழை பெய்து வருவதாக, உள்ளூர் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

# தேசிய ஸ்குவாஷ் போட்டி




இலங்கை ஸ்குவாஷ் சம்மேளனம் 44ஆவது தடவையாக நடத்திய தேசிய ஸ்குவாஷ் போட்டி இலங்கை விமானப்படை முகாம் இரத்மலானை ஸ்குவாஷ் வளாகத்தில் ஜனவரி 4ஆம் திகதி முதல் 7ஆம் திகதி வரை நடைபெற்றது.

புதிய ஆண்கள் மற்றும் பெண்கள், 35 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள், 40 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் மற்றும் 50 வயதுக்கு மேற்பட்ட வல்லுநர்கள், 55 வயதுக்கு மேற்பட்ட நிபுணர்கள், ஆண்கள் கேடயம் போட்டி, பெண்கள் மற்றும் ஆண்கள் ஓபன் ஆகிய பிரிவுகளின் கீழ் போட்டிகள் நடத்தப்பட்டன. இந்த போட்டிகளில் உள்ளூர் விளையாட்டு வீரர்கள் பலர் கலந்து கொண்டனர்.

ரவீது லக்சிறி மற்றும் ஷமில் வக்கீல் ஆகியோர் ஆடவர் திறந்த ஆண்கள் மற்றும் திறந்த பெண்கள் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றனர்.

இறுதிப் போட்டியில் ரவிடு லக்சிறி 3க்கு 0 என்ற புள்ளிக்கணக்கில் தொடர்ந்து 12ஆவது தடவையாகவும்,




மகளிர் பிரிவில் சனித்மா சினலி 3க்கு 1 என்ற புள்ளிக்கணக்கிலும் சம்பியன் பட்டத்தை வென்றனர்.

தேசிய ஸ்குவாஷ் தெரிவுக்குழு உறுப்பினர் விங் கமாண்டர் நளின் ஜயதிலக மற்றும் YETI நிறுவனத்தின் பணிப்பாளர் திஷான் பாலசூரிய, தேசிய ஸ்குவாஷ் சம்மேளனத்தின் தலைவர் தம்மிக்க விஜேசுந்தர, இலங்கை ஸ்குவாஷ் சம்மேளனத்தின் தலைவர் துணைத் தலைவர் மற்றும் போட்டி ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் குரூப் கேப்டன் எரந்த கிகனகே ஆகியோரும் பிரசன்னமாய் இருந்தனர்.

டெஸ்ட் தரவரிசை பட்டியலில் முதலிடத்தில்

# தொடர்கிறார் பும்ரா

டெஸ்ட் கிரிக்கெட் பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசை பட்டிலை ஐ.சி.சி. வெளியிட்டுள்ளது. இதில் இந்திய அணியின் ஜஸ்பிரீத் பும்ரா 908 புள்ளிகளுடன் முதலிடத்தில் தொடர்கிறார். இடது கை சுழற்பந்து வீச்சாளரான ரவீந்திர ஜடேஜா ஒரு இடம் முன்னேறி 9ஆவது இடத்தை, ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்காட் போலண்டுடன் பகிர்ந்து கொண்டுள்ளார்.

இந்திய அணிக்கு எதிரான சிட்னி டெஸ்ட் போட்டியில் இரு இன்னிங்ஸையும் சேர்த்து 10 விக்கெட்களை வீழ்த்திய ஸ்காட் போலண்ட் 29 இடங்கள் முன்னேற்றம் கண்டுள்ளார். ஆஸ்திரேலிய அணியின் கேப்டன் பாட் கம்மின்ஸ் 2ஆவது இடத்துக்கு முன்னேறி உள்ளார். தென் ஆப்பிரிக்காவின் காகிசோ ரபாட ஒரு இடம் முன்னேறி 3ஆவது இடத்தை அடைந்துள்ளார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 10 ஜனவரி 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.